இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"என் ஊழியன் யாக்கோபை முன்னிட்டும் நான் தேர்ந்துகொண்ட இஸ்ரயேல் பொருட்டும் பெயர் சொல்லி உன்னை அழைத்தேன்; நீ என்னை அறியாதிருந்தும் உனக்குப் பெயரும் புகழும் வழங்கினேன். நானே ஆண்டவர்; வேறு எவருமில்லை; என்னையன்றி வேறு கடவுள் இல்லை; நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு வலிமை அளித்தேன். கதிரவன் உதிக்கும் திசை தொடங்கி மறையும் திசை வரை என்னையன்றி வேறு எவரும் இல்லை என்று மக்கள் அறியும்படி இதைச் செய்கிறேன்; நானே ஆண்டவர்; வேறு எவரும் இல்லை".
(எசா 45:4-6)

# பேராயராக 25-ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறார் ஓய்வுப் பெற்ற பேராயர் முர்ஃபி பாக்கியம்

ஓய்வுப் பெற்ற பேராயர் முர்ஃபி நிக்கோலஸ் பாக்கியம் அவர்கள் கடந்த 4 அக்டோபர் 1995-ல் ஆயராக , பினாங்கு குருத்துவக் கல்லூரியில் அருள்பொழிவு செய்யப்பட்டார். அதற்கு முன்பாக இவர் வட்டார குருத்துவக் கல்லூரியாகத் திகழ்ந்த 'கோலேஜ் ஜெனரலில்' முதல்வராகப் பணியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. அப்போது, குருத்துவ மாணவர்களுக்கு நன்னெறி இறையியல் பாடத்தைப் போதித்து வந்தார்.

அக்காலக்கட்டதில், இரண்டாம் வத்திக் கான் திருச்சங்கத்தின் போதனையால் கவரப்பட்ட இவர் திருவழிப்பாட்டை



பேராயர் முர்ஃபி நிக்கோலஸ் பாக்கியம்

கலாச்சாரமயமாக்குதல் பணியில் அதிகம் ஈடுபாடு காட்டத்தொடங்கினார். இதன் விளைவாக இதர சமயங்களைப் பற்றிய மேன்மையான புரிந்துணர்வுக்கும் வழிவகுத் தார் என்றால் மிகையாகாது.

ஏறக்குறைய 2013-ஆம் ஆண்டளவில், இவரது பதவி ஓய்வுக் காலத்தில், ஆசிய வால் ஸ்திரிட் ஜெர்னல் (Asian Wall Street Journel) எனும் பத்திரிக்கை இவருடனான ஒரு நேர்காணல் நிகழ்வை நடத்தியது. அந்த நேர்காணலில், தாம் மலேசியாவில் ஏற்பட்டுக்கண்டிருக்கும் சமயங்களுக்கிடையிலான கருத்து வேற்பாடுகள்குறித்து கவலைக் கொள்வ தாகவும், இதனிமித்தம், சமயத் தலைவர் மக்களிடையே சகிப்புத்தனமை வேரூன்று வதைக் காண முற்றபட வேண்டும் என்றும் கேட்டுகொண்டார்.

இன்று தமது பேராயர் நியமனத்தின் 25-ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவர் நாடுகளுக்கிடையிலான அமைதிக் கும், நல்லுறவுக்கும் சேவையாற்றும் பணிக்கு உதவும் வகையில் வத்திக்கான் அலுவலகத்தால் தூதரகப் பணியிலும் பங்களிக்க அழைக்கப்பட்டார்.

### திருத்தந்தையின் பேராயருக்கான வாழத்துச் செயுதி

கடந்த செப்டம்பர் 7-ஆம் திகதியிடப்பட்ட திருத்தந்தையின் வாழ்த்து மடலில், திருத்தந்தை பிரான்சிஸ், பேராயராக தமது வெள்ளிவிழாவைக் கொண்டாடும் பேராயர் முர்ஃபி நிக்கோலஸ் பாக்கியம் அவர்களுக்கு வழத்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார். அவ்வாழ்த்து மடலில்,

***'பேராயர் அவர்களே, உங்களது அயராத மேய்ப்புப்பணி வாயிலாக நீங்கள் ஆற்றிய இறைமக்களுக்கான மேய்ப்புப் பணிகளை மனக்கண்முன் கொணர்கிறேன். தங்களின் பணியின் நிமித்தம் தாங்கள் காட்டி வந்த ஆர்வம், அர்ப்பணிப்பு, முன்மதி மற்றும் உழைப்பு ஆகியவற்றைகொண்டு சிறப்பாக பணியை நிறைவு செய்தீர். அனைத்துக்கும் மேலாக, தங்களின் முன்மாதிரியான நம்பிக்கை வாழ்வாலும், கோட்பாடுகளின் அடிப்படையிலும் திருஅவையின் திருத் தந்தையரோடான ஒன்றிப்பாலும் உங்கள் பணியை சிறப்பாக நிறைவேற்றினீர்"***

என்று திருத்தந்தை பகழாரம் சூட்டிய தோடு ஆசீரும் வழங்கினார்.

மேற்கூறப்பட்ட திருத்தந்தையின் வாழ்த்துச் செய்தியானது, கடந்த அக்டோபர் திங்கள் 1-ஆம் திகதி கொண்டாடப்பட்ட அகில உலக முதியோர் தினத்தையொட்டி கொண் டாடப்பட்ட திருப்பலியில், பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களால், பேராயர் முர்ஃபி பாக்கியம் அவர்களின் முன்னிலை யில் வாசிக்கப்பட்டது.

### பேராயர் முர்ஃபி நிக்கோலஸ் பாக்கியம் (அக்டோபர் 4, 1995 அக்டோபர் 4 வரை)

கோலாலம்பூர் பேராயரின் துணை ஆயாராக திருத்தந்தை ஜான் பால் II ஏப்ரல் 1,1995 அன்று நியமிக்கப்பட்டேன். கோலேஜ் ஜெனரல் அப்போது பினாங்கு, புலாவ் திக்குசில் இருந்து தஞ்சோங் பூங்காவிற்கு மாற்றப்பட்டது. நான் கல்லூரி ஜெனரலுக்கு விரிவுரையாளராகத் திரும்பினேன். பின்னர் 6 ஆண்டுகள் அக்கலூரியின் அனைத்துப் பணிகளையும் கவனிக்கும் முதல்வராக (ரெக்டராக) நியமிக்கப்பட்டேன்.

பின்னர் பேராயர் அந்தோனி சோட்டர் பெர்னாண்டஸ் அவர்கள் 2003 மே 24 அன்று பேராயர் பொறுப்பிலிருந்து விலகிய சூழலில் நான் மே 29, 2003 அன்று கோலாலம்பூரின் 3-வது பேராயராக பொறுப்பேற்றேன்.

நான் 6 டிசம்பர் 2013 அன்று 75 வயதை எட்டியபோது பேராயர் பொறுப்பிலிருந்து ஓய்வுப்பெற 2013 டிசம்பர் 13 அன்று



ஓயவுப் பெற்ற பேராயர் முர்ஃபி பாக்கியம் அவர்களுடன் பேராயர் ஜூலியன் லியாவ், அருள்தந்தை எட்வின் பீட்டர் & அருள்தந்தை மைக்கல் சியா ஆகியோர்

வத்திக்கான் ஒப்புதல் தெரிவித்தது.

ஒவ்வொரு ஆயரக்குமான கோட்பாட்டு முன்னுரிமை நான் கொண்டிருந்த கருணை மற்றும் அமைதிக்கான எனது முன்னுரிமையை எடுத்துக்காட்டுகிறது.

பேராயராக, 25 ஆண்டுகளுக்குப் பிறகு, கடவுள் எனக்குத் தயவுக் காட்டினார், இதனிமித்தம் கடவுள் நிச்சயமாக இரக்கமுள்ளவர் என்பதற்கு என்னால் சான்றளிக்க முடியும்.

கிளந்தானின், கோத்தா பாருவில் அங்கிருந்த அருள்தந்தை மேல்படிப்புக்கு வெளிநாடு சென்றிருந்த போது, அங்கு தங்கிருந்த எனது நாட்களை நான் பொற்காலமாகக் கருதினேன்.

பினாங்கு மறைமாவட்டத்திலிருந்து இந்த மாமறைமாவட்டத்திற்கு நான் வந்தபோது, பேராயர் சோட்டர் என்னை வரவேற்று வழிகாட்டினார். ஒரு பெரிய மேய்ப்பரோடு பணி செய்த விலைமதிப்பற்ற காலங்கள் அவை. பேராயர் சோட்டர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் கார்தினலாக உயர்த்தப்பட்டார்.

பொதுநிலையினர், அருள்பணியாளர்கள், துறவற அருள்சோகோதர-சகோதரிகள், மற்றும் பிற சமயத்தினர் அனைவரின் ஆதரவிற்கும் நான் மிகவும் நன்றியுள்ள வனாக இருக்கிறேன்.

பேராயராக, 25 ஆண்டுகள் கடவுளின் தயவைப் பெற்ற பிறகு நான் இனி என்ன சொல்ல முடியும்?

வத்திக்கான் II-ன் போதனையின் அடிதளமிடப்பட்ட திருஅவைக்கு இங்கு தலைமை தாங்குவதற்கான ஒரு சிறந்த காலம் எனக்கு வழங்கப்பட்டது குறித்து இறைவனுக்கு நன்றி மாலை சூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தமது பேராயர் ஜூலியன் லீயாவ் அவர்களின் அன்புக்கும் நட்புக்கும் நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பை நான் பயன்படுத்துகிறேன். இங்குள்ள நீங்கள் ஒவ்வொருவருக்கும், இந்த நற்கருணை கொண்டாட்டத்தைத் தங்கள் வீடுகளி லிருந்து நேரடி ஒளிபரப்பின் மூலம் பார்க்கிறவர்களுக்கும், நான் மனமார்ந்த நன்றி கூறுகிறேன்..

எல்லாம் வல்ல இறைவன் என் மீது கொண்டிருந்த நம்பிக்கைக்கும் அன்பிற்கும் நான் நன்றி கூறுகிறேன். கடவுள் போற்றப்படுவாராக.

*+பேராயர் முர்ஃபி நிக்கோலஸ் பாக்கியம்*

## வாரம் ஓர் அலசல்: அனைவரும் உடன்பிறந்தோர் - 'FRATELLI TUTTI' - பகுதி 2

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மூன்றாவது திருமடலாக வெளிவந்துள்ள “அனைவரும் உடன்பிறந்தோர்” என்ற திருமடலின் தொடர்ச்சி ....

### பகுதி 2 அனைவரும் உடன்பிறந்தோர் -

**சமய சுதந்திரம்**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "அனைவரும் உடன்பிறந்தோர் (Fratelli tutti)" என்ற தனது புதிய திருமடலின் எட்டாவது மற்றும், இறுதிப் பிரிவில், சமய சுதந்திரத்திற்கு உறுதி வழங்கப்படவேண்டும் என்று கூறியுள்ளார். இன்றைய நம் உலகில் உடன்பிறந்த உணர்வு மேலோங்க மதங்கள் உழைக்க வேண்டும். அதேநேரம், வன்முறை மற்றும், பயங்கரவாதச் செயல்களுக்கு, மத நம்பிக்கை ஒருபோதும் அடிப்படையாக அமையக் கூடாது. அவ்வாறு அமைந்தால், அது மதத்தின் பெயரை இழிவுபடுத்துவதாகும். பயங்கர வாதம், பணத்தாலோ ஆயுதங்களாலோ ஆதரவளிக்கப்படக் கூடாது.

**கனிவன்பின் அற்புதம்**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "அனைவரும் உடன்பிறந்தோர்" என்ற தனது திருமடலின் ஆறாவது பிரிவில், **"சமுதாயத்தில் உரையாடலும் நட்பும்"** என்ற தலைப்பில், "சந்திப்புக் கலை" பற்றி விளக்கியுள்ளார். ஒருவர் ஒருவரை, குறிப்பாக, உலகின் கடைக்கோடியில் வாழ்வோர், சமுதாயத்தில் வாய்ப்பிழந்தோர் மற்றும், பழங்குடி இன மக்களைச் சந்திக்கையில், நாம் அவர்களிடமிருந்து ஏதாவது ஒன்றைக் கற்றுக்கொள்கிறோம். இந்த உலகில் பயனற்றவர், மதிப்புக் குறைந்தவர் என்று எவரும் இல்லை.. ஒருவரோடு உண்மையாகவே உரையாடு கையில், அவரின் நியாயமான ஏக்கங்கள் பற்றி அறிந்து, அவர்மீது உயர்ந்த எண்ணம் இத்தகைய சந்திப்பில், கனிவன்பால் வெளிப்படும் புதுமைகள் பற்றி அறிய வருவோம். என்கிறார்.

**அமைதியின் கலை மற்றும், மன்னிப்பின் முக்கியத்துவம்**

"புதுப்பிக்கப்பட்ட சந்திப்பின் பாதைகள்" என்ற தலைப்பைக் கொண்டுள்ள, அனைவரும் உடன்பிறந்தோர் என்ற திருமடலின் ஏழாவது பிரிவில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அமைதியின் மதிப்பு மற்றும், அதை ஊக்குவிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார்.

உண்மை, நீதி மற்றும், இரக்கம் ஆகியவற்றோடு தொடர்புடையது அமைதி. இது, பழிவாங்கும் உணர்விலிருந்து விலகி, மற்றவருக்குப் பணியாற்றும் மற்றும், ஒப்புரவையும், ஒருவர் ஒருவரின் முன்னேற்றத்தை வளர்க்கும் வலையும் தூண்டும். அமைதியைக் கட்டியெழுப் புவது, ஒருபோதும் முடிவுறாத செயல்.

எனவே, அந்தச் செயலில் மனிதரின் மாண்பும், பொது நலனும் மையமாக இடம்பெறவேண்டும். மேலும், மன்னிப்பு, கமைதியோடு தொடர்புடையது. எவரையும் ஒதுக்காமல், எந்த விதிவிலக்கும் இன்றி எல்லாரையும் அன்புகூரவேண்டும். அதேநேரம், அநீதியால் துன்புறுவோர், தங்களது மாண்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, தங்களது சக்தியெல்லாம் கூட்டி உரிமைக்காகப் போராடவேண்டும். ஏனெனில், மனித மாண்பு கடவுளின் கொடை

**போர், மனித சமுதாயத்தின் தோல்வி**

தொடர்ந்து, ஏழாவது பிரிவில், போர் மற்றும், மரண தண்டனை பற்றிய தன் எண்ணங்களையும் திருத்தந்தை வழங்கியுள் ளார். உலக அளவில் மரண தண்டனை ஒழிக்கப்படவேண்டும், இதில் கொலை செய்பவரும், தனது மாண்பை இழக்கிறார், மனிதரின் மாண்பு கடவுள் வழங்கிய கொடை என்று திருத்தந்தை கூறியுள்ளார்.

மேலும், போர் அச்சுறுத்தலாக, அனைத்து உரிமைகளும் புறக்கணிப்படுவதையும் குறித்து நிற்கின்றது. போர், அரசியல் மற்றும், மனித சமுதாயத்தின் தோல்வியாகும். அது, தீமையின் சக்திகளின் முன்பாக வேதனையளிக்கும் தோல்வியாகும். மேலும், கடந்த காலத்தில் மட்டுமல்ல, இன்றும் பல அப்பாவி குடிமக்களைத் தாக்குகின்றன. இதற்கு நியாயமும் சொல்லப்படுகின்றன. இதனால், இனிமேல் போரே வேண்டாம் என்று, நாம் மிக வேகத்துடன் குரல் எழுப்ப வேண்டும்.

*-தொடரும்* *ஆர்.கே.*

## 'வாட்செப்' வழி தொடர் விவிலியக் கல்வி

கொவிட-19 பெரும் தொற்றின் போது ஏறக்குறைய எல்லா நாடுகளும் நடமாட்டக் கட்டுப்பாட்டை விதித்தன. இயல்பு வாழ்க்கை நிலைகுத்தியது. இந்த இக்கட்டான காலத்தில் திருவழிபாட்டு கொண்டாட் டங்களும் தடை செய்யப்பட்டன அல்லது அதில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கை ஆலய வளாகத்தின் கொள் அளவைப் பொறுத்து 20-30 விழுக்காடு குறைக்கப்பட்டது. இச்சூழலில் பெரும்பாலான இறைமக்கள் வெறுமனே இல்லத்தில் நேரத்தைக் கழிக்க வேண்டிய சூழலுக்கு ஆளானார்கள்.

இந்த காலக்கட்டத்தில் ஒரு சிலரின் வேண்டுகோளுக்கிணங்க, பொதுநிலை யினாரான ஆர்.கே. சாமி வாட்செப் வழியாக இயங்கலை விவிலியக் கல்வியைத் (online Bible study) தொடங்கினார். தொடக்கமாக, மத்தேயு நற்செய்தியைத் தேர்வுச் செய்து, இரண்டு மூன்று அதிகாரங்களை மட்டும் உள்ளடக்கிய தொடர் பாடங் களைக்கொண்ட இளகுவான பாடத்திட் டத்தை வகுத்தார். இதன்படி, மத்தேயு நற்செய்தியை 14 பாடங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பாடமும் உள்ளடக் கிய இரண்டு அல்லது மூன்று அதிகாரங்களுக்கு விளக்கவுரை எழுதி, பாட இறுதியில் கேள்விகள் அமைத்துக் கொடுத்தார்.

கடந்த 2020, மார்ச் 10-ம் திகதி தொடங்கிய இந்த மத்தேயு விவிலியக் கல்வி இந்த அக்டோபர் மாத 20ஆம் திகதி நிறைவு பெறுகிறது. இரு வாரங்களுக்கு ஒரு பாடம் எனும் இடைவெளியில் ஒவ்வொரு பாடமும் அனுப்பப்பட்டது. தீபகற்ப மலேசியாவின் மூன்று மறைமாவட்டங்களையும் சேர்ந்த பெரும்பாலான தமிழ் பேசும் அருள் பணியாளர்களும் இதற்கு ஆதரவும் ஆசியும் வழங்கினர் என்பது குறிப் பிடத்தக்கது.

பேரருட்தந்தை ஜேம்ஸ் ஞானப்பிர காசம் அவர்கள் உட்பட மற்றும் சில அருள்பணியாளர்களும் பாடங்களைக் கண்காணித்தனர். இந்த இயங்கலை விவிலியக் கல்வி 5 பேருடன் தொடங்கி, இப்போது தீபகற்ப மலேசியாவில் முதல் குழுவில் சுமார் 145 பேர் பங்கு கொள்ளும் அளவுக்கு வளர்ந்துள்ளது. தீபகற்ப மலேசியாவின் மூன்று மறைமாவட்டங்களையும் சேர்ந்தவர்களும் இதில் உத்வேகத்துடன் கலந்து கொண் டனர்.

மேலும் சென்னையைச் சேர்ந்த அருள்பணியாளர் அந்தோணி தாஸ் அவர்களின் ஏற்பாட்டில், தமிழ் நாட்டின் சென்னை பகுதிகளில் நூற்றுக் கணக்கானோர் இந்த விவிலியக் கல்வியில் இயங்கலை (வாட்செப்) வாயிலாக பங்கெடுத்து வருகின்றனர். இணைய வசதி குறைவாக உள்ள கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்காக இவர்கள் இந்தப் பாடங்களை அச்சிட்டு, அவர்களையும் இத்திட்டத்தில் பங்கெ டுக்க ஏற்பாடு செய்தனர்.

தூய ஆவியாரின் அருளால், ஶ்ரீ லங்காவைச் சேர்ந்த அருள்தந்தை ஜேசுதாசன் அவர்களின் ஏற்பாட்டில் ஶ்ரீ லங்காவிலும் இந்த விவிலியப் பாடம் கல்முனை மறைமாவட்டதில் அறிமுகப் படுத்தப் பட்டது. இதனைத் தொடர்ந்து இரு வாரங்களுக்கு முன், இங்கிலாந்தில், பெர்மிங்ஹாம் என்ற இடத்தில் வாழும் தமிழ் பேசும் சமூகமுகத்திற்கும் இந்த பாடம் துவங்கப்பட்டது .

புனித பவுல் அடியாருக்கு இயேசு வெளிப்படுத்தியது போல, பெற்றுக் கொண்ட நற்செய்தியை மற்றவர் களிடம் பகிர்ந்து கொள்ளா விட்டால் பயனில்லை எனக் குறிப்பிடும் சகோ. ஆர்.கே சாமி, நற்செய்தியை மற்றவர் களிடம் பகிர்ந்து கொள்ள நாம் பணிக்கப்பட்டுள்ளோம் என்றும் இது நம்மக்கான தலையாயக் கடமை என்பதையும் வலியுறுத்தி வருகிறார்.

ஒவொவொரு பாடத்திற்குமான கேள்விக ளுக்குக் கூகல் படிவத்தின் வாயிலாக (Goodle Form) விடைகளைப் பதிவு செய்வது, இத்திட்டத்திற்கு மேலும் சிறப்பூட்டுகிறது. கடந்த ஆகஸ்டு மாதம் கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் மேய்ப்புப்பணி கல்வி கழகம் இந்த விவிலியக்கல்வித்திட்டதை அங்கீகரித்தது.

சகோ. ஆர்.கே.சாமி தொடங்கிய இந்த விவிலியக் கல்வி திட்டத்தில், ஏறக்குறைய 45 ஆண்டுகள் எனக்கு நன்கு அறிமுகமான இவரோடு அந்தோணி இன்னாசி எனும் நானும் இணைந்து பாடத் தயாரிப்பிலும் இதர பணிகளிலும் ஈடுபட்டு வருவதில் மகிழ்கிறேன். நவம்பர் மாத இறுதியில் மற்றொரு புதிய ஏற்பாட்டு நூலோடு இக்கல்விப் பயணம் தொடரும். முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் இந்த விவிலிய பாடத்திட்டத்தில் தமிழில் எழுத, வாசிக்கத் தெரிந்த அனைவரும் பங்கெடுக்க அழைக்கப்படுகிறார்கள். அடுத்த அறிவிப் புக்கு காத்திருங்கள்.

-அந்தோணி இன்னாசி, கெம்பாங்கான்.

## 'கடவுளுக்கு உரியதை கடவுளுக்குக் கொடுப்போம்

இன்று ஆண்டின் பொதுக் காலத்தின் 29-ஆம் ஞாயிறுவில் நாம் இணைக்கிறோம். இன்று சிறப்பாக, ‘கதிரவன் உதிக்கும் திசை தொடங்கி மறையும் திசை வரை என்னையன்றி வேறு எவரும் இல்லை என்று மக்கள் அறியும்படி இதைச் செய்கிறேன்; நானே ஆண்டவர்; வேறு எவரும் இல்லை.’ (எசா 5:6) என்று கடவுள் வலியிறுத்திக் கூறுவதைக் கேட்கிறோம். இதையே புனித பவுல் அடிகளும், ‘ செயலில் வெளிப்பட்ட உங்கள் நம்பிக்கையையும், அன்பினால் உந்தப்பட்ட உங்கள் உழைப்பையும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை எதிர் நோக்கி இருப்பதால் நீங்கள் பெற்றுள்ள உங்கள் மனவுறுதியையும் நம் தந்தையாம் கடவுள்முன் நினைவுகூருகிறோம்.’ என்றும் நீங்கள் கிறிஸ்துவால் தேர்ந்துகொகள்ளப் பட்டவர்கள், தூய ஆவியார் தரும் வல்லமையோடும், மிகுந்த உள்ள உறுதியோடும் அழைக்கப்படுகிறோம் என்கிறார்.

மறைபரப்பு ஞாயிறன்று வெளியிடப்பட்ட திருத்தந்தையின் சிறப்பு செய்தியில், அறுவடையோ மிகுதி. வேலையாள்களோ குறைவு’ என்ற குரலுக்கு “இதோ, நானிருக்கிறேன்” என்னை அனுப்பும் என்று பதில் கூற நாம் முன்வர வேண்டும்.

இன்றைய நற்செய்தியில், சீசருக்கு உரியதை சீசருக்கும் கடவுளுக்கு உரியதை கடவுளுக்கும் கொடுங்கள் என்று கூறுகிறார் இயேசு. இன்றைக்கு நாம் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழாமல், தங்களுடைய விருப்பத்தின்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் கடவுளுக்கு உரியவர்கள் என்றால், அவருக்கு உகந்த வாழ்க்கை வாழ்வதுதானே முறை! இந்த உண்மையை நாம் உணர்ந்தவர்களாய், இயேசுவைப் போன்று முன்மதியோடு செயல்பட்டு, கடவுள் ஏற்படுத்தியுள்ள பொறுப்புகளில் உள்ளவர்களுக்குப் பணிந்து நடந்து, ஆண்டவருக்கு உகந்த வாழ்க்கை வாழ முயற்சி செய்வோம்.

மேலும், சீசருக்கு உரியவற்றைச் சீசருக்குக் கொடுங்கள்’ என்று சொன்ன இயேசு, “கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்குக் கொடுங்கள்” என்கின்றார். சீசருக்கு ஒரு குறிப்பிட்ட எல்லைக் கொண்ட நிலப்பகுதிதான் உரியதாக இருக்கும்; ஆனால், கடவுளுக்கு நம்முடைய ஆன்மா உட்பட எல்லாமும் உரியது. அதனால் அதை கடவுளுக்கு கொடுங்கள் என்கின்றார் இயேசு. இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் ஆண்டவராகிய கடவுள், சைரசிடம், கூறியதை மறக்கவோ அல்லது புறக்கணிக்கவோ இயலாது.

அப்படியானல், உண்மைக் கடவுளுக்கு உரியவர்களாகிய நாம், அவரிடம் நம்மை முழுவதும் ஒப்படைத்து, புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில் குறிப்பிடுவது போல, நம்பிக்கை செயலில் வெளிப்படக்கூடிய, உழைப்பு அன்பினால் உந்தப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும். அதுவே நாம் கடவுளுக்கு உகந்தவர்கள் என்பதற்குச் சான்றாகும்.

ஆகவே, எல்லாமே இறைவனுக்கு சொந்தம், நாம் அனைவரும் அவரால் தேர்ந்துகொள்ளப்பட்ட கருவிகள் என்ற மனநிலையோடு வாழ்வோம். அப்படி வாழும்போது நம்மையே முற்றிலுமாக இறைவனுடைய கைகளில் கையளிப்போம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம். கிறிஸ்தவர் என்ற முறையில் இந்த உலகிற்கான தமது கடமைகளையும் நாம் மறக்க இயலாது. அதே வேளையில் திருமுழுக்கால் நாம் கடவுளுக்கும் திருவைக்கும் கொண்டிருக்கும் பொறுப்பு களையும் கைக்கழுவ இயலாது. இரண்டு பணிகளுக்குமிடையே நமது வாழ்வு சீர்பெற வேண்டும்.

-சவரிநாதன்- சுங்கைபட்டாணி

**பொதுக்காலம் 29-ஆம் ஞாயிறு**

எசே 245: 1, 4-6
திபா 96: 1,3. 4-5. 7-8. 9-10ac .
1 தெச 1: 1-5a
மத் 22: 15-21

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் I**